**Minutes of the Public Hearing Meeting conducted on 09.04.2010 at 04.45 P.M. at Project site Vadaseri village, for the proposed Distillery unit of M/s.Kings India Chemicals Corporation Ltd., at Vadaseri village, Orathanadu Taluk, Thanjavur District.**

As per the Public Notice by the Member Secretary, Tamil Nadu Pollution Control Board dt 6-03-2010, all the arrangements for the public hearing at the factory site in Vadaseri has been made including the Police protection. However, the public hearing could not be started at the right time. It started at 04.45 P.M. at the project site. The reason for the delayed commencement of public hearing is furnished in the covering letter Rc.No. 49029/2009/Ex.2/dt.10.04.2010 to this minutes. The following persons attended the meeting.

1. The District Collector i/c., Thanjavur.
2. The Joint Chief Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Chennai.
3. The Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Thanjavur.
4. The Project proponents and
5. A section of public belonging to villages other than Vadaseri (copy of attendance is enclosed)

The District Collector i/c has presided over the meeting. The Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Thanjavur welcomed the gathering and requested the project proponent to brief about the project in power point presentation. The Chairman and consultant of the project gave a technical presentation about the project .The details of queries raised by various individuals and the answers given by the project proponents are as follows:

**1. Thiru K. Kalaivannan, Advocate, Mannargudi :**

Will the public in this area be affected due to the installation of 64 m height chimney?

**Answer by project proponent:**

The height of chimney has been calculated based on the formula prescribed by the Pollution Control Board. If the treated flue gas is discharged at the height of 64 m, it will be diluted and will not cause any impact.

**2. Thiru Nedunchezhian , Ullikottai**

There is an opinion that the agriculture lands will be affected due to the establishment of the factory. How this village will be benefited by this factory?

**Answer by project proponent :**

This factory is proposed in 20.21 acres of land. 18 lakh litres of water is required if this area is used for agriculture. Whereas only 17 lakh litres of water will be used in this factory. Due to lesser ground water drawal there will not be any impact on ground water.

**3. Thiru R. Parameswaran, Paravakottai**

What is the diameter of the process bore wells?

**Answer by project proponent :**

3 Nos. of 6 inches diameter bore wells with 3 inches diameter suction pipes are provided. These three bore wells will be operated for 12 hours per day only. Penalty will be imposed by the Government for exceeding the limit.

**4. Thiru Nadimuthu, Aladikkumulai,**

About 10 years back I came to this existing chemical factory for research purpose. At that time the people have reported that due to this chemical factory there will not be any coconut tree in the surrounding and the agriculture land will be affected. But it is not so. How many people will be given employment by this factory? This factory is only an agriculture based process. Inform how may will get employment?

**Answer by project proponent :**

Direct employment will be given to about 200 people and 500 people will be indirectly benefited.

**5.<u>Thiru T. Inbarasan, Environment Protection Co-ordinator, Mahadevapattinam.</u>**

**(i)** Due to the installation of 1000 feet deep bore well by the factory, the adjacent bore wells in the vicinity will not get water flow – please clarify. If so due to continuous water drawal by the factory, the adjacent bore wells will not get adequate water supply and agriculture will not be possible- please clarify.

**Answer by project proponent :**

The factory has provided 3 Nos. of 6 inches diameter 300 feet deep bore wells. 17 lakh litres/day of water will be drawn from these bore wells for process. If this entire factory area is used for agricultural purpose the water requirement is 18 lakh litres/day.

In the surrounding villages 1500 acres of agriculture land is provided with 400 pump sets to draw 1 lakh litres of water per day per acre. Whereas this factory will draw only 40,000 litres per day of water, This data is furnished based on the statistical report of Tamil Nadu Agricultural University.

**(ii)** Whether water is available if 1000 feet deep bore well is provided?

**Answer by project proponent :**

Water will not be obtained. It is a sulphur content soil. If the 1000 feet deep well is provided the water obtained is only a waste water.

**6. <u>Thiru O.K. Ambikapathy, Paravakottai, Rajasambalpuram.</u>**

Will the agriculture in this area be affected due to the establishment of this factory?

**Answer by project proponent :**

Molasses, Tappiaco, Corn are the raw materials for this factory. These crops are short term crops. The farmers will be profited within short period due to cultivation of these crops.

**7. <u>Thiru O.R.P. Kannan, Councilor, Paravakottai</u>**

There is an opinion that the effluent will be discharged outside in due course. Is it true?

**Answer by project proponent :**

The technology is given by Praj Industries, Pune. The spent wash incineration boiler will be designed to incinerate the concentrated form of effluent. Other fuels could not be used in this boiler. Inter locking arrangement is provided to stop the production automatically if the effluent is discharged outside.

**8. <u>Thiru. Senthil , Paravakottai</u>**

How the raw materials such as tapiaco and corn will be utilized?

**Answer by project proponent :**

20 to 25 tonnes of corn/Tapiaco can be produced per acre. It is a short term crop. It will be procured at site by the industry as it is done by sugar factories.

**09.<u>Thiru. T.K.P. Lenin, Paravakkottai</u>**

Please describe about the effluent disposal.

**Answer by project proponent :**

There are two types of effluent is generated.

(i) Spent wash

(ii) Spent Leese

Spent wash will be concentrated in Multiple Effect Evaporators and incinerated in the spent wash incineration boiler and thereby electricity will be produced. This power will be utilized for captive consumption and excess will be transmitted to Tamil Nadu Electricity Board.

The spent leese and boiler condensate will be treated in the R.O. Plant and utilized in the process.

**10. Thiru. Mathiarasan, Mannargudi Councilor**

This factory has given employment for 2000 people. It is a latest Technology. There is no industry in this area. It is a backward area. Green belt is good. Pollution Control Board shall give permission for this factory.

**11. Thiru. A.M.Sathiamoorthy, Suriyakkottai**

This factory has provided 3 Nos. of bore wells of 350 feet deep. It is a backward District. Employment will given by this large industry. It shall be permitted.

**12. Thiru. Pazhamani, Mannargudi**

The permission has been given to similar industries. Other four industries are functioning continuously. No action has been taken on Pollution Control Board Acts. Whether priority in employment will be given to our people?

**Answer by project proponent :**

Priority will be given to all. This technology is a proven technology in countries like America, Turkey and Africa. The same will be implemented here as per the provisions of Pollution Control Acts. There are 9 similar units functioning in India.

**13. Thiru.Elangovan, Ullikkottai**

One bore well will be provided to irrigate 2 acres of land It is used for irrigating adjacent lands also. This factory is having 40 acres of land so 20 bore wells should be provided. It was reported that the unit has provided 3 or 4 bore wells. False roumer is being propagated against this unit.

**Answer by project proponent :**

The banana plantation around a distillery unit at Palpannai, Trichy is flourishing. This truth is well known to the villagers of Vadaseri.

14. **Thiru. Siva Kamaraj, Bharathia Janatha Party:**

Informed that the industry will produce electricity. Will it be supplied to this District?

**Answer by project proponent :**

Electricity will be supplied to Tamilnadu Electricity Board.

15. **Thiru. Siva Mathiazhagan, Paravakkottai: (Former Panchayat Union, Chairman)**

There is an opinion that the industry will discharge the effluent to the river Kattar which will affect the agriculture. Please clarify.

**Answer by project proponent :**

No drop of water will be discharged outside. Rs. 50 crores is allotted for pollution control measures only. The same technology is implemented in 9 places in India. There is no effluent discharge.

16. **Thiru. Pakkirisamy, Diravida Munnettra Kazhagam, Mannargudi**

No such industry is located in the integrated Thanjavur District. Public in other Districts are not objecting the establishment of industries in their areas. This area will be benefited by this industry and people will get employment.

17. **Thiru . Thomas Kamaraj, Paravakkottai:**

I have 4 bore wells. 300 feet bore well is adjacent to my land. There is no impact. There will not be any impact on environment due to this industry. I am a commerce student. There won't be any loss/profit. No loss due to the installation of bore well.

**18. Thiru. Pandian, Kandithampatti:**

I am an unemployed. Our children will get employment by this industry which will be useful for us.

**19. Name not known, Panchayat Union Chairman, Paravakkottai:**

Industry authorities have clarified the doubts. Thank you for not discharging effluent in to the odai. There are 100 people are working in this factory from my village, our people will get employment. We welcome this project.

**20. Thiru. Anandan, Youth Congress, Mannargudi.**

One question for Pollution Control Officer. Whether the agriculture land surrounded by the areas where the multinational companies in Tamil Nadu like Pepsi and Coco-cola are drawing water has got affected? Whether Public Hearing has been conducted for the similar industries proposed in the arid places such as Gantharvakottai, Kancheepuram and Chennai?

**Answer by Joint Chief Environmental Engineer, Tamilnadu pollution Control Board, Chennai:**

Requested to ask the questions relevant to this project only and the same will be answered by the project proponent. This is not the forum to ask questions related to other industries.

**21. Thiru. Rajendran**

It is a rain fed area. Is there Rain Water Harvesting Plant?

**Answer by project proponent:**

3 Nos. of Rain Water Harvesting facilities have been provided. You can see if you want.

**22. Thiru. Nadimuthu, Aaladukkumulai**

Whether compost will be supplied to Public? Whether treated water can be recycled? What is the depth of water table in this area?

**Answer by project proponent :**

M/s. Kothari Sugar Mill located in Trichy District is supplying compost to public. The same procedure will be followed here also.

**23. Name not known, Panchayat President, Mahilankottai**

At what depth good water could be obtained in our area?

**Answer by project proponent :**

Good water could be obtained at 250 feet to 300 feet depth. Beyond that sulphur content water will be obtained. So bore could not be provided beyond 250 feet depth.

**24. Thiru. Veerakumar, Mannargudi**

There is no industry in our area. So public will support the establishment of such industries. The establishment of this industry will benefit the son of the soil.

The meeting came to end and with vote of thanks by Assistant Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Thanjavur.

This is submitted to the Ministry of Environment and Forest as per Lr. No. F. No.J-11011/559/2009-IA (I) Government of India, Ministry of Environment and Forest (IA Division) dated 07.10.2009.

| | |
|---|---|
| Assistant Environmental Engineer<br>TNPC Board, Thanjavur | District Collector (i/c)<br>Thanjavur. |

**09.04.2010 அன்று மாலை 04.45 மணியளவில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வடசேரி கிராமத்தில் தி/ள். கிங்ஸ் இந்தியா கெமிக்கல்ஸ் கார்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினரால் புதிதாக தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள எரிசாராய ஆலைக்கான, திட்ட வளாகம், வடசேரி கிராமத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புரைக் கூட்ட நடவடிக்கைகள்.**

06.03.2010 அன்று உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை அவர்களால் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி 09.04.2010 அன்று மாலை 03.00 மணிக்கு பொது மக்கள் கருத்து கேட்புரைக் கூட்டம் நடத்துவதற்காக திட்ட வளாகம், வடசேரி கிராமத்தில் காவல்துறையினரின் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. இருப்பினும் பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தை உரிய நேரத்தில் ஆரம்பிக்க இயலவில்லை. பொது மக்கள் கருத்து கேட்புரைக் கூட்டம் மாலை 04.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இக் கூட்டம் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதற்கான விளக்கம் இந்த கூட்ட நடவடிக்கைக்கான முகப்புக் கடிதத்தில் Rc.No. 49029/2009/Ex.2/dt.10.04.2010 விரிவாக கூறப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் கீழ்க்கண்டோர் பங்கேற்றனர்.

1. மாவட்ட ஆட்சியர் (பொ), தஞ்சாவூர் மாவட்டம்.
2. இணை தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை
3. உதவி சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர்
4. திட்ட உரிமையாளர்கள் மற்றும்
5. வடசேரி கிராம மக்களை தவிர்த்து பிற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

இக் கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் (பொ) அவர்கள் தலைமையேற்று நடத்தினார். கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் உதவி சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் வரவேற்று, திட்ட உரிமையாளரை புதிதாக அமைக்கப்படவுள்ள எரிசாராய ஆலை குறித்த விளக்கத்தினை பவர் பாயிண்ட் (Power Point Presentation) மூலம் விளக்குமாறு கேட்டுக் கொண்டார். பின் இந்த நிறுவனத்தின் தொழில் நுட்ப ஆலோசகர் கீழ்கண்ட விபரங்களை தெரிவித்தார். தொழிற்சாலையினுடைய விவரங்களை விரிவாக Power Point Presentation மூலமாக விளக்கினார். அதன் பின்பு கீழ்கண்ட நபர்களால் கேள்விகளும் கருத்துக்களும் எழுப்பப்பட்டு அதற்கு நிர்வாகத்தினரால் கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டது.

1.**திரு. கே. கலைவாணன், வழக்கறிஞர் , மன்னார்குடி**

இந்த 64 மீட்டர் உயரம் உள்ள புகை போக்கி அமைவதால் இந்த மக்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்படுமா?

**திட்ட முனைவோரின் பதில் :**

மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள பார்முலா (Formula) வின்படி இந்த 64 மீட்டர் உயரம் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த 64 உயர மீட்டர் உயரத்தில் பறக்கவிடப்படும் சுத்திகரிக்கப்பட்ட வாயுக்கள் காற்றுடன் கலந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

2.**திரு. நெடுஞ்செழியன், உள்ளிக்கோட்டை.**

இந்த ஆலை ஆரம்பிப்பதன் காரணமாக விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொல்லுகிறார்களே அது உண்மையா? இந்த ஆலையினால் இந்த ஊருக்கும் மற்ற ஊர்களுக்கும் ஏற்படக் கூடிய நன்மைகள் என்ன?

**திட்ட முனைவோரின் பதில் :**

தொழிற்சாலைக்கு பதிலாக இந்த 20.21 ஏக்கர் நிலத்தில் தென்னை விவசாயம் செய்தால் நாள் ஒன்றுக்கு 18 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படும். ஆனால் இந்த எரிசாராய ஆலையை நிறுவினால் நாள் ஒன்றுக்கு 17 லட்சம் லிட்டருக்கும் குறைவான தண்ணீரே தேவைப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் குறைய வாய்ப்பு இல்லை. நிலத்தடி நீர் வாரியம் நீர் ஆய்வு செய்து நிலத்தடி நீருக்கு எந்த பாதிப்பும் இல்லை என அறிக்கை கொடுத்துள்ளார்கள். எனவே பாதிப்பு எதுவும் இல்லை.

3.**திரு.ஆர். பரமேஸ்வரன் , பரவாக்கோட்டை**

இந்த எரிசாராய உற்பத்திக்கு தண்ணீர் எடுக்க அமைக்கப்படும் ஆழ் குழாயின் சுற்றளவு என்ன?

**திட்ட முனைவோரின் பதில் :**

6 அங்குலம் சுற்றளவுள்ள 3 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. அதிலும் தண்ணீர் உறிஞ்சும் குழாயின் சுற்றளவு 3 அங்குலம் மட்டும்தான். இந்த குழாய்கள் மூலம் 12 மணி நேரம் மட்டுமே தண்ணீர் எடுக்க முடியும். அதற்கு மேல் எடுத்தால் அரசாங்கம் அபராதம் விதிக்க வழி உள்ளது.

4. <u>திரு. நாடி முத்து, ஆலடுக்குழுலை .</u>

நான் 10 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருஆய்வு சம்பந்தமாக வந்திருந்தேன். இந்த கிங்ஸ் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை அமைவதினால் பக்கத்தில் இருக்கும் சாகுபடி அழியும் என்று சொன்னார்கள். இதன் சுற்றுப்புறத்தில் தென்னை மரங்கள் இருக்காது. நிறைய பாசன வயல்கள் பாதிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் தற்போது அந்த மாதிரியான நிலை இல்லை. தற்பொழுது இந்த வடிப்பாலை அமைவதினால் ஏற்படும் நிலையினை தெளிவு படுத்த வேண்டும். இந்த வடிப்பாலையினால் எத்தனை பேருக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் வேலை வாய்ப்பு வழங்க இயலும்? எந்த மரமும் பட்டுப்போனதாக தெரியவில்லை. இது ஒரு இரசாயன ஆலை என்றும் இதனால் பக்கத்தில் நிலத்தடி நீர் எல்லாம் கலராக மாறிவிடும் என்றும் கூறியதை ஒரு தொலைகாட்சியில் பார்த்தேன். ஆனால் நான் இங்கு பார்க்கும் இடமெல்லம் பசுமையாக இருக்கிறது. திருச்சியிலும், திருமண்டங்குடியிலும் இதே போன்று வடிப்பாலை உள்ளது. இந்த ஆலைகளுக்கு அருகில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயம் நன்றாக செய்கிறார்கள். இந்த எரிசாராய ஆலை சுற்றுச் சூழலுக்கு எதிரானது அல்ல. வேளாண்மை சார்ந்த ஒரு தொழில் என்று மக்கள் அறிந்து கொண்டார்கள். எத்தனை நபருக்கு வேலை கொடுப்பார்கள் என்று மட்டும் தெளிவாக்க கேட்டுக் கொள்கிறேன்.

**திட்ட முனைவோரின் பதில் :**

இந்த நிறுவனத்தினால் சுமார் 200 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 500 பேருக்கும் அதிகமானவர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

5. <u>திரு. டி. இன்பரசன், சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் மகாதேவபட்டினம்.</u>

(i) சுற்றுப் புற கிராமங்களில் 2 ஏக்கர் விவசாயத்திற்கு ஒரு ஆழ் குழாய் கிணறு போட்டுள்ளார்கள். 1000 அடிக்கு ஆழ்குழாய் கிணறு போட்டுள்ளதாகவும் அதனால் மற்ற ஆழ்குழாய் கிணற்றில் தண்ணீர் வருமா என்பதை தெளிவுபடுத்த வேண்டும் . எத்தனை ஏக்கர் நிலத்தில் எத்தனை போர் போட்டுள்ளார்கள்? அப்படி என்றால் இங்கே போடப்பட்டுள்ள போரில் தண்ணீர் தொடர்ந்து எடுத்தால் நிலத்தடி நீர் பாதிக்கும், அருகிலுள்ள போர்களில் தண்ணீர் கிடைக்காது, விவசாயம் செய்ய முடியாது என்று கூறுகிறார்கள் பதிலளிக்கவும்.

**திட்ட முனைவோரின் பதில் :**

6அங்குலம் சுற்றளவுள்ள 3 ஆழ்குழாய் கிணறுகள் 300 அடி மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு 17,00,000 லிட்டர் மட்டும் தண்ணீர் எடுக்க முடியும். இதற்கு மாற்றாக இந்த நிலத்தில் விவசாயம் செய்தால்

தேவைப்படும் நீரின் அளவு 18,00,000 லிட்டர் ஆகும். சுற்றியுள்ள கிராமங்களில் 1500 ஏக்கர் விவசாய நிலத்தில் 400 பம்ப் செட்டுகள் உள்ளன. இந்த பம்ப் செட்டுகளில் ஒரு ஏக்கருக்கு 1,00,000 லிட்டர் தண்ணீர் உறிஞ்சப்படும். ஆனால் இந்த ஆலை மூலம் ஒரு ஏக்கருக்கு 40,000 லிட்டர் மட்டுமே தண்ணீர் உறிஞ்சப்படும். இந்த கணக்கானது தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் புள்ளி விவரப்படி தெரிவிக்கப்படுகிறது.

(ii) இந்த பகுதியில் 1000 அடிக்கு போர் போட்டால் தண்ணீர் வருமா?

**திட்ட முனைவோரின் பதில் :**

தண்ணீர் வருவது சிரமம். இது கந்தக பூமி என்பதால் 1000 அடிக்கு போர் போட்டால் வெறும் கழிவுநீர் தான் வரும். அந்த தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாது. 300 அடி முதல் 600அடி வரை உள்ள ஆழ்குழாய் கிணற்றில் மட்டுமே தண்ணீர் வரும்.

6.<u>திரு.ஒ.கே. அம்பிகாபதி , பரவாக்கோட்டை ராஜாம்பாள்புரம்:</u>

இந்த ஆலை அமைப்பதால் இந்த பகுதியில் விவசாயம் பாதிகப்படுமா?

**திட்ட முனைவோரின் பதில் :**

இந்த ஆலைக்கு சர்க்கரை கழிவு , மரவள்ளிகிழங்கு, சோளம் போன்ற மூலப்பொருள் தேவைப்படுவதால் தற்போது பயிரிடப்படும் பயிர்களைவிட மக்காச்சோளம் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவதால் விவசாயிகளுக்கு குறைந்த நாட்களில் அதிக வருமானம் கிடைக்கும்.

7.<u>திரு.O.R.P. கண்ணன் ,கவுன்சிலர் பரவாக்கோட்டை</u>

ஓரளவு நிரம்பிய பிறகு கழிவுநீரை வெளியேற்றிவிடுவார்கள் என்று கருத்து வருகிறதே அது உண்மையா?

**திட்ட முனைவோரின் பதில் :**

பிராஜ் இண்டஸ்ட்ரீஸ் என்ற பூனாவில் உள்ள நிறுவனம் இந்த தொழிற் நுட்பத்தை தந்துள்ளது. இதில் கழிவு நீரிலிருந்து பெறப்படும் கசடுகளை அடர்த்தியாக்கி அதை எரிபொருளாகப் பயன்படுத்துமாறு Spent wash Boiler எனப்படும் கொதிகலன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கழிவுகளை வெளியேற்றினால்

ஆலையை இயக்க முடியாத Interlocking தொழில் நுட்பம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே கழிவு நீரை வெளியேற்ற முடியாது.

**8. திரு. செந்தில் பரவாக்கோட்டை :**

மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படும் மர வள்ளிக் கிழங்கும், மக்காச் சோளமும் எவ்வகையில் பயன்படுத்தப்படுகிறது?

**திட்ட முனைவோரின் பதில் :**

ஒரு ஏக்கருக்கு 20 லிருந்து 25 டன் உற்பத்தி செய்யப்படும். இது பயிரிடப்படும் காலம் 7 லிருந்து 8 மாதம் வரை ஆகும். சர்க்கரை ஆலையிலிருந்து கரும்புகளை வாங்குவது போல் இந்தக் கிழங்குகளை ஆலை நிர்வாகத்தினரே வாங்கி எரிசாராயம் உற்பத்தி செய்ய வாய்ப்பு உள்ளது.

**9. திரு. T.K.P. லெனின் :**

இந்த ஆலை கழிவு நீரை வெளியேற்றுவது தொடர்பாக விளக்கமாக தெரிவிக்கவும்.

**திட்ட முனைவோரின் பதில் :**

இந்த ஆலையிலிருந்து இரண்டே இரண்டு வகையான கழிவுகள் வெளியேறுகிறது.

1. ஸ்பென்ட் வாஷ் (Spent wash) எனப்படும் சர்க்கரை ஆலை கழிவு

2. எரிசாராயம் எடுக்கப்பட்ட பின்பு வெளியேறும் கழிவு (ஸ்பென்ட் லீஸ்). இந்த கழிவு நீராவி மூலமாக வெளிவரும் நீர் குளிர்விக்கப்பட்டு குடிநீராக ஆலைக்கு பயன்படுத்தப்படும். Spent wash-யை பன்முறை ஆவியாக்கல் (Multiple Effect Evaporator) மூலம் அடர்த்தியாக்கி எரிபொருளாக மாற்றி Spent wash incinerator மூலம் எரித்து மினசாரம் தயாரிக்கப்படும். இவ்வாலையில் தயாரிக்கப்படும் மின்சாரத்தில் இருந்து ஆலையின் தேவை போக மீதமுள்ள 1.5 மெகா வாட் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் உண்டாகும் கான்டென்சேட் (Condensate) எதிர் சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) முறையில் சுத்திகரிக்கப்பட்டு ஆலையின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

10.**திரு. மதியரசன் , மன்னார்குடி நகர் மன்ற உறுப்பினர்**

2000 பேருக்கு இந்த தொழிற்சாலை நிர்வாகம் வேலை வாய்ப்பை வழங்கி கொண்டிருக்கிறார்கள். இதன் கழிவு நவீன தொழில் நுட்பம் மூலம் வெளியேற்றப்படுகிறது. இங்கு தொழிற்சாலை கிடையாது. மக்கள் பின் தங்கி உள்ளார்கள். மரங்கள் நன்றாக இருக்கிறது. மாசு கட்டுப்பாடு வாரியம் இந்த பகுதியில் தொழிற்சாலை வழங்கிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

11.**திரு. ஏ. எம். சத்தியமூர்த்தி சூரியக்கோட்டை**

இந்த ஆலை 350 அடியில் 3 போர் போட்டு இருக்கிறார்கள். இந்த பகுதி பின தங்கிய மாவட்டம். மிகப்பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தி வேலை வாய்ப்பு ஏற்படுத்தி புரட்சிகரமான பணியைச் செய்கிறார்கள். அனுமதிக்க வேண்டும்.

12.**திரு. பழ. மணி, மன்னார்குடி**

இதே போன்ற வடிப்பாளை நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே போன்ற நான்கு தொழிற்சாலைகள் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன. அதன் மீது எவ்வித நடவடிக்கையும் மாசு கட்டுப்பாடு சட்டங்களின்படி எடுக்கப்படவில்லை. எங்கள் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா?

**திட்ட முனைவோரின் பதில்** :

எல்லோருக்கும் முன்னரிமை வழங்கப்படும். அமெரிக்கா துருக்கி மற்றும் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் இந்த தொழில் நுட்பம் நிரூபனமான தொழில் நுட்பம். அத்தகைய தொழில் நுட்பமே இங்கும் மாசு கட்டுப்பாடு சட்டங்களின்படி பயன்படுத்தப்படும். இந்தியாவில் இத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி 9 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

13.**திரு. இளங்கோவன் , உள்ளிக்கோட்டை**

சாதாரணமாக 2 ஏக்கருக்கு ஒரு போர் போட்டிருக்கிறார்கள். அவர்கள் சொந்தத்திற்கு மட்டும் பாய்ச்சுவதில்லை. பக்கத்து வயல்களிலும் பாய்ச்சுகிறார்கள். ஆனால் ஆலையைப் பொருத்தவரை 40 ஏக்கருக்கும் மேலே உள்ளது. 40 ஏக்கர் என்றால் 20 போர் போட வேண்டும். 3 அல்லது 4 போர் போட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் வளர்ச்சி பிடிக்காமல் பொது மக்களிடம் ஒரு தவறான கருத்தை பரப்பி இருக்கிறார்கள். திருச்சியில் பால் பண்ணைக்கு அருகில்

பெரிய எரிசாராய வடிப்பாலை உள்ளது. அதன் அருகில் செழுமையான வாழைப் பயிர் உள்ளது. இதனை வடசேரி மக்களே நேரில் போய் பார்த்து உண்மை அறியலாம்.

14.**திரு. சிவ காமராஜ் , பாரதீய ஜனதா கட்சி**

இந்த தொழிற்சாலைக்கு தேவையான மின்சாரத்தை இந்த நிறுவனமே தயார்செய்யும் என்று கூறினார்கள். இந்த மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்க முடியுமா என்பதை தெரிவிக்க வேண்டும்.

**திட்ட முனைவோரின் பதில்** :

உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கொடுக்கப்படும் என உறுதி கூறுகிறோம்.

15.**திரு. சிவ. மதியழகன் , பரவாக்கோட்டை (முன்னால் ஊராட்சி மன்ற தலைவர்)**

இந்த ஆலையின் கழிவு நீர் காட்டாற்றில் கலந்து அந்த பகுதியில் நிலத்தடி நீர் பாழ்பட்டு விவசாயம் பாதிக்கும் என்று சொல்லப்படுகிறது. இது குறித்து விளக்க வேண்டும்.

**திட்ட முனைவோரின் பதில்** :

ஒரு சொட்டு கழிவுநீர் வெளியே செல்ல வாய்ப்பு இல்லை. ரு. 50 கோடி திட்ட மதிப்பீட்டில் மாசு கட்டுப்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே இந்தியாவில் 9 இடத்தில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கழிவு நீர் வெளியேறுவதில்லை.

16.**திரு. பக்கிரிசாமி, தி.மு.க., மன்னார்குடி**

ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் இது போன்ற தொழிற்சாலை இல்லை. மற்ற மாவட்டத்தில் தொழிற்சாலை கட்டுகிறார்கள். தொழிற்சாலை வேண்டாம் என்று அந்த பகுதி மக்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. சேறோடு சோறு சாப்பிடுகிறோம். இந்த தொழிற்சாலை இருந்தால் நம் பகுதி மிகுந்த பயன்பெறும். தொழிற்சாலை ஏற்படுத்தினால் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

17.**திரு. தாமஸ் காமராஜ், பரவாக்கோட்டை**

எனக்கு 4 போர் உள்ளது. 300அடி தாண்டி போர் போட்டு பக்கத்தில் பயன்படுத்தி வருகிறேன். ஆனால் இப்போது கெமிக்கல்ஸ் கம்பெனியால் பாதிப்பு

என்று சொல்கிறார்கள். இந்த ஆலை போடுவதால் எந்த பாதிப்பும் இருக்காது. நான் ஒரு பொருளாதார பட்டதாரி மாணவன். எனக்கு தெரிந்த வகையில் கணக்கீடு செய்து பார்க்கும்போது லாபம் நஷ்டம் தெரியவில்லை போர் வெல் போடுவதால் நஷ்டம் கிடையாது.

18.<u>திரு. பாண்டியன் , கண்டிதம்பட்டு</u>

எனக்கு வேலை வாய்ப்பு கிடையாது. இந்த கம்பெனியில் எங்கள் குழந்தைகளுக்கு வேலை கிடைத்தால் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவிக்கிறேன்.

19.<u>பெயர் தெரியவில்லை , ஊராட்சி மன்ற தலைவர் பரவாக்கோட்டை</u>

இந்த நிறுவனத்தினர் மிகவும் தெளிவாக பதில் அளித்துள்ளார்கள். கழிவு நீர் எங்கள் ஓடையில் கலக்காது என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தொழிற்சாலையில் எங்கள் ஊரிலிருந்து 100 இளைஞர்கள் வேலை பார்க்கிறார்கள். இந்த தொழிற்சாலை ஆரம்பித்து எங்கள் பகுதிக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த தொழிற்சாலை அமைய நாங்கள் முழு ஆரவு வழங்குகிறோம்.

20.<u>திரு. ஆனந்த் , இளைஞர் காங்கிரஸ் மன்னார்குடி</u>

மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி அவர்களுக்கு ஒரு கேள்வி. பெப்சி கொக்கோ கோலா போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்தில் தண்ணீர் எடுக்கின்றதோ அந்த தண்ணீர் எடுக்கின்ற இடங்களைச் சுற்றி விவசாய நிலங்கள் ஏதாவது பாதிக்கப்பட்டுள்ளதா? அதே போல கந்தாவகோட்டை, காஞ்சிபுரம், சென்னை போன்ற வறண்ட மாவட்டங்களில் எல்லாம் இதுபோன்ற கம்பெனி வருவதற்கு கருத்துக் கேட்பு நடத்தியுள்ளீர்களா?

**இணை தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை அவர்களின் பதில் :**

இந்த தொழிற்சாலை சம்பந்தபட்ட கேள்விகளை மட்டுமே கேளுங்கள். அதற்கான பதிலை தொழிற்சாலை நிர்வாகத்தினர் கூறுவார்கள். மற்ற தொழிற்சாலைகளைப் பற்றி கேட்பதற்குரிய கருத்தரங்கம் இது இல்லை.

21.திரு. ராஜேந்திரன்

மழை நீரை நம்பி விவசாயம் செய்கிறோம். மழை நீர் சேகரிப்பு திட்டம் உள்ளதா?

**திட்ட முனைவோரின் பதில் :**

3 மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. நீங்களே பார்க்கலாம்.

22.திரு. நாடிமுத்து , ஆலடிக்குமுளை

இதர ஆலைகளில் உள்ளது போல கம்போஸ்ட் உரத்தை விவசாயத்திற்கு வழங்குவீர்களா? சுத்திகரிக்கப்பட்ட நீரை திரும்பவும் பயன்படுத்தலாமா? என்பதை சொல்லவும் நம் பகுதியில் எத்தனை அடி வரை நல்ல நீர் கிடைக்கும்?

**திட்ட முனைவோரின் பதில் :**

திருச்சி மாவட்டத்திலுள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை கம்போஸ்ட் உரத்தை பொதுமக்களுக்கு வழங்குகிறது. அதேபோல் இங்கும் கழிவுகள் மூலம் உரங்கள் வழங்குவதற்கு திட்டம் உள்ளது.

23.பெயர் தெரியவில்லை , மகிழங்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர்

நமது பகுதியில் எத்தனை அடி வரை போர் போட்டால் நல்ல தண்ணீர் கிடைக்கும்?

**திட்ட முனைவோரின் பதில் :**

250 அடி முதல் 300அடி வரை நல்ல தண்ணீர் கிடைக்கும். அதற்கு மேல் போனால் சல்பர் கலந்த தண்ணீர் வரும். எனவே 250 அடிக்கு மேல் ஆழம் போக முடியாது.

24.திரு. வீரக்குமார் , மன்னார்குடி

நம் ஊரில் உள்ளவர்களுக்கு ஒரு தொழிற்சாலை கூட கிடையாது. ஆனால் பிற ஊர்களில் தொழிற்சாலைகள் நிறைய உள்ளன. அந்த மக்கள் நல்ல ஒரு பயன்பாட்டிற்கு வந்து இருக்கிறார்கள். நமது இடத்தில் தொழிற்சாலை வரும்போது நாம் வரவேற்க வேண்டும். இந்த தொழிற்சாலை வந்தால் இந்த ஊரில் வாழுபவர்களுக்கு மிகவும் பயனாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவி சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே முடிவடைந்தது.

இந்த கூட்ட அறிக்கையானது கடித எண். J.110111/559-IA (I) மத்திய அரசு , சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை (IA Division) நாள் 07.10.2009 – ன் படி சமர்பிக்கப்படுகிறது.

உதவி சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
தஞ்சாவூர்.

மாவட்ட ஆட்சியர் (பொ)
தஞ்சாவூர்